# இந்திப் போர்.

## சிவானந்த அடிகள் வழக்கு.

(நமது நிருபர்)

சென்னை, ஜுலை. 8

நேற்று எழும்பூர் 3-வது மாகாண மாஜிஸ்திரேட் முன் இந்தி எதிர்ப்பு சம்பந்தமாக்கைதியான ஈழத்து சிவானந்த அடிகள் மீது தொடரப்பட்டுள்ள வழக்கு விசாரணைக்கு வந்தது.

இன்ஸ்பெக்டர் கேசவமேனன் இந்தி எதிர்ப்பு சம்பந்தமான கூட்டங்களில் எதிரி வெகுவாகப் பங்கெடுத்துக் கொண்டாரென்றும் துண்டுப் பிரசுரங்கள் வழங்கினார் என்றும் சாட்சியுங் கூறினார். குறுக்கு விசாரணை செய்தபோது எல்லா வகுப்பாரும் அக் கூட்டத்திற்கு வந்திருந்தார்களா என்று தான் கூறக் கூடவில்லை.

பிறகு சுருக்கெழுத்து சப் இன்ஸ்பெக்டர் சாமிநாத சாஸ்திரி எதிரி மூலக்கொத்தளத்தில் 1-5-38ம் தேதி பிரசங்கம் செய்தாரென்றும் அப்போது கனம் ராஜகோபாலாச்சாரியார் பற்றி பிரஸ்தாபித்த போது சிறிது கலவரம் ஏற்பட்டதென்றும் கூறினார்.

ஹெட்கான்ஸ்டேபிள் காமசந்தும் கான்ஸ்டேபிள் கிருஷ்ணசிங்கும் தாம் இந்தி எதிர்ப்பு நிலயத்திலிருந்து தொண்டர்கள் புறப்பட்டு கனம் ராஜகோபாலாச்சாரியார் வீட்டை நோக்கிப் போனதைப் பார்த்ததாகக் கூறினார்கள்.

பிராஷிக்யூஷன் தரப்பில் இன்னும் சில சாட்சிகளை விசாரிக்க வேண்டுமென்றும், அதற்காக விசாரணையைத் திங்கட்கிழமை வரை ஒத்தி வைக்க வேண்டுமென்றும் பிராஷிக்யூடிங் இன்ஸ்பெக்டர் கோரினார்

எதிரி வக்கீல்:- எதிரி இது வரை சிறை வைத்தியசாலையில் நோயாயிருந்தார். இப்போது அவரை சிறைக்கு அனுப்பி விட்டார்கள். அவர் மிகவும் மெலிந்திருக்கிறார். எனவே, அவருக்கு விசேஷ உணவளிக்க உத்திரவாகக் கோருகிறேன்.

மாஜிஸ்:- எதிரி, சமுதாயத்தில் என்ன நிலையுடையவர்.

எ. வக்கீல்:- எதிரி, ஒரு பி. ஏ. பட்டதாரி, தமிழ் சங்கத் தலைவர், தமிழ்ச் செல்வி என்னும் பத்திரிகாசிரியர்.

பி. இன்ஸ்:- எதிரியின் நிலையைப் பற்றி கரூர் போலீஸாரை அறிக்கையிடும்படி கோர்ட்டார் உத்திரவிடலாம்.

எ. வக்கீல்:- அறிக்கையைத் தருவிக்க நாட்செல்லும்.

மாஜிஸ்:- எதிரி ஜாமீனில் போய் விடலாமே.

எ. வக்கீல்:- அப்படி விடுதலை பெற எதிரி விரும்பவில்லை. ஜாமீன் சேகரிக்கும்படி நான் அவருக்குக் கூறியிருக்கிறேன்.

பி. இன்ஸ்:- அவரை இன்னும் பல காரியங்கள் செய்யும்படி கூறுங்கள். அவருடைய அறிவு வியர்த்தமாகிறது. அவருக்குத் தக்கபடி புத்தி கூறுங்கள்.

எதிரியை எழுந்திருக்கும்படி கூறி மாஜிஸ்திரேட்டை அவரைப் பார்க்கும்படி கோரி அவருடைய உடல் நிலையை உத்தேசித்து விசேஷ உணவளிக்க வேண்டுமென்று எதிரி வக்கீல் கோரினார்.

பி. இன்ஸ்:- இது என்ன ஆர்ப்பாட்டம்? இது போலவே ஸ்டாலின் ஜெகதீசனையும் கொண்டு வந்து காட்டுகிறார்கள். ஜாமீன் கொடுப்பதில் என்ன கஷ்டமிருக்கிறது.

கோர்ட்டார்.- இது ஒரு பெரிய இயக்கமாகத் தெரிகிறது. பலர் சிறை செல்லுகிறார்கள். ஆனாலும் யாரும் இவருக்கு ஜாமீன் கொடுக்க முன்வரவில்லையா?

பி. இன்ஸ்:- இந்த எளிய பேர் வழிக்கு யார் விவாதிக்கிறார்கள்?

எதிரி வக்கீல்:— எதிரிக்காக வாதிக்க வக்கீல்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். தோழர் சத்திய மூர்த்திக்கும், கார்ப்பரேஷன் செக்மோசடி வழக்கில் சம்மந்தப்பட்டிருந்த ஆலம்பராச்சாரிக்கும் விசேஷ உணவளித்திருக்கும்போது, அவர்களை விட எந்த வகையில் குறைந்திராத என் கட்சிக்காருக்கு ஏன் விசே உணவளிக்கக் கூடாதெனக் கேட்கிறேன்.

கோர்ட்டார் சிறை விதிகளைப் பரிசீலனை செய்த பிறகு, பண்டித மோதிலால்நேரு போன்ற உயர்தர வாழ்க்கை முறையைப் பின் பற்றியவர்களுக்குத் தான் விசேஷ உணவளிக்க இடமிருக்கிறதென்றும், ஆகவே, இந்தக் கோரிக்கையை அனுமதிக்க முடியாதென்றும் கூறினார்.

எதிரி சார்பில் தோழர்கள் அதினிஷிஸுல், அல்லாபிச்சையும் ஆஜரானார்கள்.

வழக்கு திங்கட்கிழமைக்கு ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

---

இந்த சிறிய யூனியன் போர்டு ஸ்தானத்தில் முஸ்லிம்களுக்கு என்று தனியாக சீட்டு ரிசர்வ் செய்யவேண்டியது கவர்மெண்டாரின் கடமையாகும். இதைப் பற்றி முஸ்லிம்களும் நொக்கத்துடன் முயற்சிப்பார்களாக என ஆனரி ஜாகிர் அப்துல் ரஹிமான் சாயபு எழுதுகிறார்.

---

# சாமி அருணகிரி நாதருக்கு 1 வருடக் கடுங்காவல்.

(ஒரு நிருபர்)

சென்னை, ஜுலை. 8

இன்று பிற்பகல் எழும்பூர் 3-வது மாகாண மாஜிஸ்திரேட் தோழர் மாதவராவ் அவர்கள் இந்தி எதிர்ப்பு சம்பந்தமாகக் கைதியான சென்னை சுவாமி அருணகிரிநாதர் அவர்கள் இ. பி. கோ. 117-வது செக்ஷன் படியும் கிரிமினல் சட்டத் திருத்தச் சட்டத்தின் 7-1 a உட்பிரிவின் படியும் குற்றவாளி எனத் தீர்மானித்து ஒவ்வொரு குற்றத்திற்கும் 1 வருஷக் கடுங்காவல் தண்டனை விதித்து, இருதண்டனைகளையும் ஏககாலத்தில் அனுபவிக்க வேண்டுமெனத் தண்டனை யளித்தார்.

பாரிஸ்டர் ரங்காமானுஜ முதமுதலியார் எழுந்து எதிரி கண்ணிய முள்ளவரென்றும், பொது ஜனங்களால் நன்கு மதிக்கப்பட்டவரென்றும் அவரை ஏ. வகுப்புக் கைதியாக நடத்தவேண்டுமென்றும் கோரியதற்கு மாஜிஸ்திரேட் இணங்கவில்லை. பி. வகுப்பிலாவது சேர்க்கவேண்டுமென்று பாரிஸ்டர் கோரியதற்கு மாஜிஸ்திரேட் தான் அதைப் பற்றி ஆலோசிப்பதாகக் கூறினார்.

---

# தோழர் சி. டி. நாயகம் வழக்கு.

(ஒரு நிருபர்)

சென்னை, ஜுலை. 8.

இந்தி எதிர்ப்பு சம்பந்தமாகக் கைதியான தோழர் சி. டி. நாயகம் அவர்கள் மீது ஏற்பட்டுள்ள வழக்கு இன்று பிற்பகல் சென்னை பிரதம மாகாண மாஜிஸ்திரேட் தோழர் குன்னி கிருஷ்ணன் நாயர் அவர்கள் முன் விசாரணைக்கு மீண்டும் வந்தது. அப்போது ரகசியப் போலீஸ் சப்இன்ஸ்பெக்டர் தோழர் கேசவமேனன் சாக்ஷியங் கூறினார்.